**இன்று (6.11.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டங்களுக்குப் பிறகு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, வருகை தந்துள்ள ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், நீலகிரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்புப் பணிகள் மற்றும் மாவட்ட வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதோடு, இம்மாவட்ட தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுப்பதற்கும், நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு பல கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டதன் விளைவாக அதற்குரிய பலன் கிடைத்துள்ளது. நம்முடைய மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்களுடன் வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை, கூட்டுறவுத் துறை, உணவுத் துறை மற்றும் பல துறைகள் ஒன்றாக இணைந்து இந்த கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகளை மேற்கொண்டதன் விளைவாக இந்நோய்த் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, நேற்றையதினம் வரை கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் மொத்தமாக பாதிக்கப்பட்டவர்கள் 6,833 நபர்கள், குணமடைந்து வீடு திரும்பியவர்கள் 6,514 நபர்கள், இறந்தவர்கள் 40 நபர்கள். 5.11.2020 அன்று பாதிக்கப்பட்டவர்கள் 33 நபர்கள், குணமடைந்து வீடு திரும்பியவர்கள் 35 நபர்கள், தற்போது சிகிச்சையில் உள்ளவர்கள் 282 நபர்கள். 5.11.2020 வரை

இம்மாவட்டத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 1,67,431 நபர்கள். 5.11.2020 அன்று மட்டும் இம்மாவட்டத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 2,453 நபர்கள். பரிசோதனை நிலையம் ஒன்று உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 4 அரசு மருத்துவமனைகளில் 255 படுக்கை வசதிகளும், தனியார் மருத்துவமனைகள் 3 இடங்களில் 28 படுக்கை வசதிகளும், கோவிட் கேர் சென்டர்களுக்கான 13 இடங்களில் 1,249 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தயார் நிலையில் 3 அரசு மருத்துவமனையில் 240 படுக்கைகளும், தனியார் விடுதிக் கட்டடத்தில் 368 படுக்கைகளும் உள்ளன. தேவையான மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் தயார் நிலையில் உள்ளன. இந்நோய்த் தொற்றைத் தடுக்க, மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளின்படி, தமிழ்நாடு முழுவதும் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்மாவட்டத்தில் இதுவரை 64 இடங்களில் 6,363 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 4,28,368 நபர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 11 நோய்க் கட்டுப்பாட்டு மையங்கள் இருக்கின்றன. இவ்வாறு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால், இந்த நோய்த் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதுடன், நோய்த் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

உதகமண்டலம் அரசு தலைமை மருத்துவமனை, சேட் நினைவு மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு கட்டட பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் எமரால்டு பகுதியில் ரூ.15.80 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கை வசதிகள் கொண்ட புதிய அரசு மருத்துவமனை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட தலைமை மருத்துவமனையும், பல்வேறு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் இருந்தாலும்கூட, உயர்தர சிகிச்சை பெற இம்மாவட்ட மக்கள் கோயம்புத்தூர் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களின் கனவை நனவாக்கும் விதமாக, நீலகிரியில் ரூபாய்

447.32 கோடி மதிப்பீட்டில் உயர்தர சிகிச்சை அளிக்க அரசு மருத்துவக் கல்லூரியுடன் கூடிய மருத்துவமனை உருவாக்கப்படும் என்று அறிவித்து, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரியில், ஆண்டுதோறும் 150 மாணவ, மாணவிகள் மருத்துவக் கல்வி பயிலக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீலகிரி மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகிய இரண்டையும் நிறைவேற்றித் தந்த அரசு அம்மாவின் அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாயகம் திரும்பிய மக்களின் கோரிக்கையை ஏற்று முதன்முறையாக முதலமைச்சரின் பசுமைவீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், 800 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. 46 ஆண்டுகளுக்குப் பின் கூடலூர் ஜென்மம் பகுதியில் வசிக்கும் பழங்குடியினருக்கு ரூபாய் 15.70 கோடி மதிப்பீட்டில் 1,726 வீடுகள் மின் இணைப்பு உட்பட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக வன நிலத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் முதன்முறையாக 1,663 தனி நபர்களுக்கும், 111 இனங்கள் சமுதாய உரிமைகளுக்கும் 468 ஹெக்டேர் பரப்பளவு வன நிலம் வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 705 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் சுமார் ரூபாய் 600 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி, 37,500 சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையான ரூபாய் 152 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 500 பழங்குடியின மக்களின் குடியிருப்புகள் ரூபாய் 5 கோடி செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தின் குளிர் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட குப்பைக் கிடங்குகளை சீரமைப்பதற்காக ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. குன்னூர் நகராட்சியில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கூடலூர் பகுதியில் ரூபாய் 204 கோடி மதிப்பீட்டில் 66/11 KV துணை மின்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. முக்கியச் சுற்றுலாத் தலமாக விளங்கும் நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, குன்னூர், கூடலூர், தேவர்சோலை,

நடுவட்டம் ஆகிய பகுதிகளிலுள்ள பேருந்து நிலையங்களில் ரூபாய் 15.69 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் 9 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் ரூபாய் 55 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, விவசாயிகள் உற்பத்திக் குழுக்கள் மூலமாக இயக்கப்பட்டு வருகிறது. இந்த முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் மூலமாக, விவசாயிகளிடமிருந்து உழவர் உற்பத்தியாளர் குழு அவர்களுடைய கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளை வாங்கி, இந்த பதப்படுத்துகின்ற நிலையத்தில் சுத்தப்படுத்தி, தரம் பிரித்து விற்பனை செய்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் லாபம் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்திருக்கிறது.

வீடற்ற ஏழைகளுக்கு குடியிருப்பு வழங்கும் உன்னதத் திட்டத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக செயல்படுத்தி, இம்மாவட்டத்தில் 4,348 பயனாளிகளுக்கு ரூபாய் 144.34 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 26,500 சிறு தேயிலை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனைக்கு பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2 வீதம் மானியமாக ரூபாய் 12 கோடி வழங்கப்பட்டு இருக்கின்றன. உதகையிலுள்ள அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா மற்றும் பழத்தோட்டம் ஆகியவை ரூபாய் 10 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. காட்டுக்குப்பை பகுதியில் ரூபாய் 2,900 கோடி மதிப்பீட்டில் 4 x 125 மெகாவாட் குந்தா நீரேற்று புனல்மின் திட்டத்திற்கான பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. அதில் 26 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன. வருகின்ற 2023–2024–ல் முழு உற்பத்தி தொடங்கப்படும்.

இன்கோசெர்வ் நிறுவனத்தில் கைகாட்டி, குந்தா, மஞ்சூர், பந்தலூர், சாலிஸ்பரி ஆகிய இடங்களில் செயல்படும் இன்கோசெர்வின் தொழிற்சாலைகளில் உள்ள பழுதடைந்த இயந்திரங்களை மாற்றி, புதிய இயந்திரங்கள் பொருத்தவும், இயங்கும் இயந்திரங்களை மேம்படுத்தவும், அடிப்படை புனரமைப்பதற்கும், ரூபாய் 17.68 கோடி

மதிப்பீட்டில் நபார்டு வங்கி கடனுதவியுடன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இங்கு வருகை புரிந்துள்ள விவசாய பெருங்குடி மக்களும், தேயிலை தொழிற்சாலை வைத்திருக்கின்ற தொழில் நிறுவனத்தைச் சார்ந்தவர்களும், இங்கு தேயிலை பரிசோதனை நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், அதன் அடிப்படையில் தேயிலை பரிசோதனை நிலையம் (Tea Testing Lab) நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** பள்ளிகள் திறப்பு குறித்து.....

**பதில்:** ஏற்கனவே இது குறித்து அரசு தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு பல்வேறு பள்ளி நிறுவனங்கள், கல்லூரிகளைச் சேர்ந்த நிறுவனங்களும், அதேபோல பெற்றோர்களும் கல்விக் கூடங்களை திறக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், பள்ளிகளும், கல்லூரிகளும் திறக்கப்படும் என்ற செய்தியை அரசு வெளியிட்டது. இதற்கு, ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளின் வாயிலாக பலர் எதிர்ப்பு தெரிவிப்பதாக செய்தி வந்தவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு வருகிற 9–ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர்–ஆசிரியர் சங்கங்களை கூட்டி கருத்து கேட்கப்பட்டு, அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

**கேள்வி:** பாஜக–வின் வேல் ஊர்வலம் குறித்து...

**பதில்:** ஏற்கனவே முடிவு அறிவிக்கப்பட்டுவிட்டது. சட்டம் தன் கடமையைச் செய்யும்.

**கேள்வி:** பசுந்தேயிலைக்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்வது குறித்து...

**பதில்:** ஏற்கனவே ரூபாய் 30 வரை கிடைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது இருக்கின்ற நிலைமைக்கு தக்கவாறு அரசு அதை நிர்ணயம் செய்யும்.

**கேள்வி:** நீலகிரி மாவட்டத்தில் Air Ambulance அமைக்கும் திட்டம் குறித்து...

**பதில்:** இது மிகப் பெரிய மலைப் பிரதேசம். நான் வரும்போதுகூட பனிமூட்டம் இருந்தது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு முதல்கட்டமாக, உடனடி மருத்துவ சேவை செய்வதற்காக அதாவது, அடிபட்டு அல்லது உயிருக்கு போராடிக் கொண்டிருப்பவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பதற்காக Air Ambulance அமைப்பதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

**கேள்வி:** மருத்துவப் படிப்பிற்கான உள் ஒதுக்கீடு 7.5 சதவிகிதம் அரசு உதவிபெறும் பள்ளிகளின் மாணவர்களுக்கும் பொருந்துமா ?

**பதில்:** அரசு பள்ளிகள் வேறு, அரசு உதவி பெறும் பள்ளிகள் வேறு. நாங்கள் ஏற்கனவே தெளிவாகச் சொல்லிவிட்டோம். முழுக்க முழுக்க அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குத்தான் இந்த 7.5 சதவிகித உள்ஒதுக்கீட்டில் அவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

**கேள்வி:** நீலகிரிக்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்ல தடை ஏதும் உள்ளதா ?

**பதில்:** இது மலைப்பிரதேசமாக இருப்பதால் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏதாவது நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டுவிட்டால் பரவலைத் தடுப்பது மிகக் கடினம். எனவே, ஒரு கட்டுப்பாட்டோடு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லலாம் என்று அரசு கட்டுப்படுத்தி இருக்கிறதேயொழிய முழுவதாக சுற்றுலாப் பயணிகள் வருவதற்கும், செல்வதற்கும் எந்த ஒரு தடையும் இல்லை.

**கேள்வி:** வனத்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுமா ?

**பதில்:** அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனத்துறையின் மூலம் படிப்படியாக காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. பிற துறைகளிலும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

நன்றி, வணக்கம்.

------